# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 ஜனவரி திங்கள் 24.01.2012—ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரஙகில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

<u>பொருள் எண் : 1</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பை கொட்டும் இடத்தில் கொட்டப்பட்டுள்ள குப்பையில் 05.01.2012—ம் தேதியன்று திடீரென்று தீப்பிடித்து தீயணைப்பு வண்டி உதவியுடன், நெருப்பு அணைக்கப்பட்ட பொழுது, தொடர்ந்து அதிகமான புகையுடன் நெருப்பு அணையாமல் இருந்ததால், தொடர்ந்து தண்ணீர் சப்ளை செய்தால் தான் நெருப்பை அணைக்க முடியும் என்று தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்ததின்பேரில், நகராட்சிக்கு சொந்தமான தண்ணீர் லாரி பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் இருந்ததால், பொதுமக்கள் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் தனியார் தண்ணீர் சப்ளை செய்யும் தண்ணீர் லாரி மூலமாக தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு, நெருப்பை உடனடியாக அணைக்கப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு வாணியக்குடி, சகாயமாதா குடிநீர் சப்ளையர், தண்ணீர் சப்ளை செய்ததற்கு 1 டிரிப்பிற்கு ரூ. 400/— வீதம் 7 டிரிப்பிற்கு ரூ.2800/—ஐ சகாய மாதா குடிநீர் சப்ளையருக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—ன்கீழ் தொகை வழஙகப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.101/2012/எச்1)

**தீர்மானம் எண்.72. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் கதவு எண்.11/46 முதல் கதவு எண்.11/49 முடியவுள்ள தெற்காக செல்லும் தெருவிற்கு 2"பிவிசி பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10,000/—க்கு 28.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.7,731/—) |
| 2. | திரு.P. தஙகமணி ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 7.87 % கூடுதல் (ரூ.8,340/—) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைத்து கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1.மேற்படி பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.10,000/—க்கு நகர்மன்ற தீர்மான எண்.1710 நாள்.30.08.2011—ன் படி மன்றம் ஒப்புதல் வழஙகி உள்ளது.
2.மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.5443/2011/இ1

**தீர்மானம் எண்.73. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட களிமாரில் ஆர்.சி.கோயிலுக்கு பின்னால் உள்ள 2” பிவிசி மற்றும் 2” ஜி.ஐ. குழாயினை மாற்றி 3” பிவிசி, 3” ஜி.ஐ. பகிர்மானக் குழாய் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.90,000/—க்கு 28.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.87,089/—) |
| 2. | திரு.P. தஙகமணி ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 4. 29 % கூடுதல் (ரூ.90,837/—) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைத்து கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1.மேற்படி பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.90,000/—க்கு நகர்மன்ற தீர்மான எண்.1711, நாள்.30.08.2011—ன்படி மன்றம் ஒப்புதல் வழஙகி உள்ளது.
2.மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண்.74. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட மதனாவிளை, ஈழக்காணிவிளை, மொகைதீன்பள்ளி, பீச் முக்கு STD பூத் அருகில், மார்க்கெட் பின்புறம், துறைமுகத்தெரு காணிக்கை மாதா கோவில் முன்புறம், தும்பக்காடு மற்றும் CMC காலனி ஆகிய இடஙகளில் உள்ள பழுதடைந்த வால்வுகளை மாற்றி புதிய வால்வுகள் வாஙகி பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.57,000/—க்கு 28.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திரு.P. தஙகமணி ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 8.55% கூடுதல் (ரூ.58,133/—) |
| 2. | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.72 % குறைவு (ரூ.53,168/—) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.72% குறைத்து கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1.மேற்படி பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.57,000/—க்கு நகர்மன்ற தீர்மான எண்.31 நாள் 24.11.2011—ன் படி மன்றம் ஒப்புதல் வழஙகி உள்ளது.
2.மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.72% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.7411/2011/இ2)

**தீர்மானம் எண்.75. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இயற்கை சீற்றம் — வடகிழக்கு பருவ மழையினால் ஏற்பட்டுள்ள சேதஙகளை சரி செய்வதற்காக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை

க.எண்.ஜி4/24347/2011 நாள் 23.12.2011–ன்படி இந்நகராட்சிக்கு ரூ.100.032 இலட்சத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகம் செல்லும் சாலையில் தார் சாலை அமைத்தல். | 49.98 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனியில் சமுதாய நலக்கூடம் அருகில் பேவர் பிளாக் சாலையும், அதன் அருகில் உள்ள குறுக்கு தெருவில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி செய்தல். | 10.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் முண்டம்பிலாவடி தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 7.45 |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட அந்தோணியார் காலனி மற்றும் ஜோசப் பெனடிக்ட் காலனியில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 3.10 |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட வடக்கு கள்ளியடைப்பு சாலையில் தார் சாலை அமைத்தல். | 5.70 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் முதல் பாலத்தன்கரை வரை தார் சாலை அமைத்தல். | 8.90 |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைத்தல் மற்றும் புதுத்தெருவில் தார் சாலை அமைத்தல். | 6.65 |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை குறுக்கு தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைத்தல். | 5.62 |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனி குறுக்கு தெருக்களில் குடிநீர் குழாய் பதித்த சிமெண்ட் தள சாலையில் ஒட்டு பணிகள் செய்யவும், அமிர்தானந்தமயி காலனி அருகில் சிறுபாலம் மற்றும் வடிகால் ஓடை அமைக்கும் பணி செய்தல். | 2.70 |
| | மொத்தம் **ரூ.** | **100.10** |

மேலும் மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.100.10 இலட்சத்திற்கு ஒதுக்கீட்டு தொகை ரூ.100.032 இலட்சம் போக மீதி ரூ. 6800/–ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து செயல்படுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அ) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். ஜி4/24347/2011, நாள் 23.12.2011–ன்படி மேற்படி திட்டப் பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வழஙகலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.7913/2011/இ1)

**தீர்மானம் எண்.76. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட சைமன்காலனி பாலம் முதல் துறைமுகத்தெரு எல்கை கல் வரை, கொட்டில்பாடு, அந்தோணியார் காலனி, ஜோசப் பெனடிக்ட் காலனி, பள்ளி ஜஙசன் முதல் துறைமுகம் பாலம் வரை, சைமன்காலனி பாலம் முதல் மாதாகாலனி வரை (பாம்பூரி வாய்க்கால் கரை) சுனாமி காலனி ( near Community Hall ) மற்றும் துறைமுகம் பிளாட் அருகில் ஆகிய இடஙகளில் புல் புதர்கள் உயரமாக வளர்ந்து விஷபூச்சிகள் குடியிருப்புகளுக்குள் வருவதாலும், சில இடஙகளில் நீர்தேஙகி மண் தூர்ந்து மிகவும் அசுத்தமாக சுகாதாரக் கேடு விளைவிக்கும்

வகையில் உள்ளதாலும், மேற்படி இடங்களில் சுத்தம் செய்து பொதுமக்கள் நலன்கருதி, பொதுமக்கள் சிரமமின்றி புழங்க ஏற்பாடு செய்ய ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு சுத்தம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ. 38,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7510/2011/எச்1)

**தீர்மானம் எண்.77. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்கள் A1 முதல் P4 வரை உள்ள அனைத்து புல சுவடிகளும் கிழிந்த நிலையில் உள்ளதால் எல்லை அளவு மற்றும் புலப்பட நகல் தயாரித்தல் பணிகள் சரிவர செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக நகர சார் ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அனைத்து புல சுவடிகளும் மத்திய நில அளவை அலுவலகத்தில் இருந்து புதியதாக வாஙகுவதற்கும், அதற்குரிய உத்தேச செலவுத் தொகை ரூ.30,000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.102/2012/tpi)

**தீர்மானம் எண்.78. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

12—வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ள 2005—06 முதல் 2009—10 வரை மொத்தம் ரூ.39,48,332/— ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செலவு தொகை ரூ.6,35,722/— ஆகும். ஒதுக்கீட்டு தொகையில் செலவு போக மீதமுள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்கான தொகை ரூ. 33,12,610/— ஆகும். மேற்படி தொகைக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி குப்பைகளை அகற்ற காம்பாக்டர் லாரி வாஙகுதல். | ரூ. 25,00,000/— |
| 2 | இந்நகராட்சி குப்பைகளை சேகரம் செய்ய 32 எண்ணிக்கை 1100 லிட்டர் கொள்ளளவு உள்ள காம்பாக்டர் பின்ஸ் வாஙகுதல். | ரூ. 8,20,000/— |
| 3 | இந்நகராட்சி குப்பைகளை அகற்ற 15 எண்ணிக்கை நான்கு சக்கர குப்பை வண்டி ( Push cart) வாஙகுதல் | ரூ. 1,3,5000/— |
| 4 | இந்நகராட்சி குப்பைகளை அகற்ற 15 எண்ணிக்கை இரண்டு சக்கர தள்ளுவண்டி வாஙகுதல். (Wheel Barrow) | ரூ. 1,80,000/— |
| | மொத்தம் | ரூ. 36,35,000/— |

மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 36,35,000/— ல் 12—வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் தற்போது மீதம் உள்ள தொகை ரூ. 33,12,610/— போக ரூ.3,22,390/—ஐ பொது நிதி அல்லது திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். அ2/04/2006)

**தீர்மானம் எண்.79. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010—11—ல் பெரியபள்ளி சாலையில் ARS ரேசன் கடை அருகில் பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணிக்கு கூடுதல் நிதி தேவைப்படுவதால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ3/333/2010(1) நாள் 21.11.2011—ன்படி பணி ரத்து செய்து உத்தரவிடப்பட்டது.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ3/333/2010(2) நாள் 21.11.2011—ன்படி மேற்படி இடத்தில் பல்நோக்கு கட்டிடம் கட்டும்

பணிக்கு 2011–12–ல் இந்நகராட்சியில் செயல்படுத்த ரூ.3,00,000/–க்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே அதன்படி மதிப்பீடு தொகை ரூ. 3,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : பணி அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.4117/2011/இ1)

**தீர்மானம் எண்.80. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான இந்திராகாலனி அருகிலுள்ள குப்பை கொட்டும் இடத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் வீடு வீடாக சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகள் நாள் ஒன்றுக்கு 4.5 மெட்ரிக் டன் வீதம் கொட்டப்பட்டு வருகிறது. அவ்வாறு தினசரி கொட்டப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகள் மலை போல் குவிந்து ஈக்கள் மொய்த்து துர் நாற்றம் வீசி சுற்றுச்சூழல் பாதிக்கும் நிலை உள்ளதாலும், குப்பை கொட்டும் இடம் சிறிய அளவில் இருப்பதாலும், மேலும் தொடர்ந்து குப்பைகளை கொட்ட இயலாத நிலை இருப்பதாலும், குப்பைகளை மட்க செய்து உரமாக்க பயன்படுத்தும் Maple EM-1 உயிர் திரவம் 20 லிட்டர் மற்றும் உயிர் திரவத்திலிருந்து குப்பைகளை மட்குவதற்கு பயன்படுத்தக்கூடிய கரைசலை தயார் செய்வதற்கு கருப்பட்டி, பெரிய பிளாஸ்டிக் வாளி, பிளாஸ்டிக் கேன் மற்றும் மக்கு ஆகிய உபகரணங்கள் வாங்குவதற்கு உத்தேச செலவு ரூ.10,000/–க்கு 13.01.2012–ல் நகர்மன்றத் தலைவர் அவர்கள் முன்அனுமதி வழங்கியதையும், அவசர அவசியம் கருதி இரண்டு விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீராம் பயோடெக், 116,பாலத்துறை ரோடு, கோவை –21 நிறுவனதாரரின் விலைப்புள்ளியை ஏற்று அந்நிறுவனத்திலிருந்து 20 லிட்டர் Maple EM-1 உயிர் திரவம் வாங்குவதற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வினியோக உத்திரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.100/2012/எச்1)

**தீர்மானம் எண்.81. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 ஜனவரி திங்கள் 24.01.2012–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**30.12.2011–ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்**

வார்டு உறுப்பினர்கள் திரு.சாதிக் (வார்டு எண்.18), திருமதி.கோமளா (வார்டு எண்.19), திரு.நூர்முகம்மது (வார்டு எண்.21) ஆகியோர் கொண்டு வரும் தீர்மானம்.

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் ரோட்டில் இயங்கி வரும் மணவாளக்குறிச்சி கூட்டுறவு பண்டகசாலை LTD - 244 குளச்சல் டவுண் டிப்போவில் சுமார் 1248 குடும்ப அட்டைக்கு மேல் உள்ளார்கள். அதில் வார்டு எண். 16, 17, 18, 19, 21, 23, 24 ஆகிய பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் மேற்படி கடையில் உணவு பொருட்கள் வாஙகுகின்றார்கள். எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம்தோறும் வழஙகப்படும் அனைத்து உணவு பொருள்களும் சரிவர கிடைப்பதில்லை. எனவே வார்டு எண். 18, 19, 21 ஆகிய பகுதிகளை சார்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருள்கள் வாஙக சிரமமாகவும், மிக தூரத்திலும் பெண்கள் எளிதில் செல்வதற்கு சிரமமாக உள்ளதால் அந்தந்த வார்டு பகுதிகளை சார்ந்த குடும்ப அட்டைகளை வார்டின் மையப்பகுதியில் புதிய நியாயவிலைக் கடையினை அமைத்து தர சம்மந்தப்பட்ட துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/7792/2011)

**தீர்மானம் எண்.82. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரிச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள் 14, 21 ஆகியவை நியாயவிலை கடைக்காக கட்டப்பட்டுள்ளது. தற்போது நியாயவிலைக் கடை வேறு இடத்தில் M.P.Fund –ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி கடைகள் காலியாகவே உள்ளது. இக்கடையினை போட்டியாளர் எவரும் இல்லாத நிலையில் திரு.பி.மார்ஷல் பெலிக்ஸ், வாணியக்குடி என்பவர் வாடகைக்கு கோரியுள்ளார். ஆகவே கடை எண். 14, 21 –ஐ வாடகைக்கு விடுவதற்கும், முன் வைப்புத் தொகை செலுத்துவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். அ2/1339/2011)

**தீர்மானம் எண்.83. அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரிச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண். 15 மற்றும் 20–க்கு வாடகைத் தொகையும், ஆண்டுக்கான உரிமமும் நீட்டிக்கப்படாமல் உள்ளது. ஆகவே 01.11.2010 முதல் 31.12.2013 வரை மூன்றாண்டுக்கு நீட்டிப்பு செய்தும், வாடகைத் தொகையில் இருந்து 15 சதவீதம் உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | உரிமைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்யப்படும் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 15 | எம்.அப்துல் கரீம் | 1510/– | 1736/– |
| 2 | 20 | எம்.அப்துல் கரீம் | 1510/– | 1736/– |

அ.குறிப்பு:மேற்படி கடைகளுக்கு வாடகை உயர்வும், மூன்றாண்டு அனுமதியும் வழஙகப்படுமானால் நகராட்சியின் வருவாய் இழப்பு தவிர்க்கப்படும் என்பதால் மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். அ2/2035/2011)

**தீர்மானம் எண்.84. அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரிச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள் 47 முதல் 52 வரை பொது நூலகத்திற்கு என ஒதுக்கீடு செய்து அதற்கான கட்டமைப்புடன் அமைக்கப்பட்டது. (பொது நூலகம் அமைத்து வாடகை மூலம் செயல்பட போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் அதற்கென காலியிடம் பெறப்பட்டு நூலகம் அமைக்கப்படும் என மாவட்ட நூலக அலுவலர், நாகர்கோவில் அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண்.1894/ஆ/2007, நாள் 19.04.2007–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது) மேலும் பொது நூலகத்திற்கென இடம் மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.எம்3/13211/2010 நாள் 30.08.2011–ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு நூலகம் அமைக்கும் பணிக்காக நடவடிக்கைகள் பொது நூலக அலுவலகத்தினாலே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் காலியாக உள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள் 47 முதல் 52 வரை கடைகளை வாடகைக்கு விடுவதற்கும், முன்வைப்பு தொகை ரூ.1,20,000/–மற்றும் வாடகை ரூ.6,000/– நிர்ணயம் செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி கடைகளை வாடகைக்கு எடுப்பதற்கு திரு.ஜே.எட்வின் ஜோஸ், திரு.எஸ்.பெரிய சுவாமி ஆகியோர் விண்ணப்பித்துள்ளனர். மாத வாடகையாக ரூ.6,000/– முன்வைப்பு தொகையாக ரூ.1,20,000/– செலுத்தவும் இசைவு தெரிவித்துள்ளார்கள். ஆகவே மேற்படி கடைகளை வாடகைக்கு விடுவதற்கு மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். அ2/1339/2011)

**தீர்மானம் எண்.85. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு முன்வைப்பு தொகை 1,20,000/–மும், மாத வாடகை ரூ.6000/–மும் செலுத்த இசைவு தெரிவித்துள்ள திரு.எஸ்.பெரியசுவாமி என்பவருக்கு கொடுத்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 5**

குளச்சல் நகராட்சியில் துறைமுகத் தெருவில் கதவு எண்.15/26.A எண் கொண்ட கட்டிடத்திற்கு வழஙகப்பட்ட குடிநீர் இணைப்பை மனுதாரர் நிரந்தரமாக துண்டிப்பு செய்ய கோரி உள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோள் ஏற்று கதவு எண்.15/26.A–யில் உள்ள குடிநீர் இணைப்பை நிரந்தரமாக துண்டிக்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ2/6182/2010)

**தீர்மானம் எண்.86. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

குளச்சல் அண்ணாசிலை அருகில் கலையரஙகத்திற்கு எதிரில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்படும் இரு சக்கரவாகனஙகளை Rope கட்டி ஒழுஙகுபடுத்துவதற்கும், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் என அறிவிப்பு பலகை வைத்திடவும் உத்தேச மதிப்பீடு ரூ. 5,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். tpi/7418/2011)

**தீர்மானம் எண்.87. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக கடந்த 1/2009–ல் பொருத்தப்பட்ட 1400 VA Invertor பழுதடைந்துள்ள காரணத்தால் மின்வெட்டு ஏற்படும் நேரங்களில் அலுவலக பணிகள் பாதிக்கப்படைகிறது. எனவே மேற்படி Invertor –ல் Tubular Battery களை புதிதாக வாங்கி பொருத்துவதற்கும், ஒயரிங மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கும், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண்.88. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

இந்நகராட்சிக்குட்பட்ட 22–வது வார்டில் வெள்ளியாகுளம் முருகன்கோயில் அருகாமையில் வசிக்கும் மக்களுக்கு போதிய அளவில் குடிநீர் கிடைக்காத காரணத்தால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு முருகன் கோயில் அருகில் பொது நல்லி அமைப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பொது நல்லி அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.89. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு பொதுநல்லி அமைத்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

இந்நகராட்சிக்குட்பட்ட குழந்தை ஏசு நகர் பகுதியில் அமைந்துள்ள சாலையில் இருசக்கர வாகனங்கள் அதிக வேகமாக செல்வதால் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி சாலையில் சட்டர்கள் அமைக்கவும், ஆசாத்நகரில் மழைநீர் வடிகாலின் உட்புறம் அமைந்துள்ள மின்விளக்கு கம்பஙகள் நீர் செல்லும் வழியை அடைத்து நிற்பதால் மழைநீர் வடிகால் சுவர்களை சிறிது இடமாற்றம் செய்து அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/54/2011)

**தீர்மானம் எண்.90.அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 10**

இந்நகராட்சிக்குட்பட்ட 2–வது வார்டில் தும்பக்காட்டுவிளையில் பொதுப் பாதையில் பயனற்று, பாதுகாப்பற்று திறந்த நிலையில் உள்ள கிணற்றில் பொதுமக்கள் குப்பைகளை கொட்டி வருவதால் சுகாதாரக் கேடு உருவாகியுள்ளது. மேலும் மேற்படி கிணறு பொதுமக்களுக்கு, போக்குவரத்திற்கு இடையூறாகவும் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி கிராவல் கொண்டு கிணற்றை மூடுவதற்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். இ1/234/2012)

**தீர்மானம் எண்.91.அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 11**

இந்நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனி பகுதியில் குப்பைகள் கொட்டுமிடத்தில் அடிக்கடி தீ பற்றிக் கொள்வதால் தீயணைப்பு அலுவலகத்தினரால் தீ அணைக்கப்பட்டு வருகிறது. தீயணைப்பு துறையினரின் ஆலோசனையின்படி, தீ பிடித்தவுடன் அணைப்பதற்கு ஏதுவாக மேற்படி பகுதியில் வினியோக குழாயிலிருந்து 3" பிவிசி பகிர்மானக் குழாய் அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 5,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 61 நாள் 30.12.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி பகுதியில் பிவிசி குழாய் மூலம் பகிர்மான குழாய் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. ஆனால் ஏ.வி.எம். கால்வாய் அருகே அடிக்கடி குழாய்

உடைவு ஏற்படுவதால் 2" G.I.Pipe மூலம் பகிர்மான குழாய் அமைக்க மறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மறு மதிப்பீட்டுத் தொகை ரூ.13,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : பணியின் அவசியம் கருதி மறுமதிப்பீட்டுத் தொகை ரூ. 13,000/–க்கு அமைக்க மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/8045/2011)

**தீர்மானம் எண்.92. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மின்னஞ்சல் நாள் **26.11.2011** மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.**47923/2011**/இ3 நாள் **24.11.2011**–ன்படி, நகர்புற உள்கட்டமைப்பு திட்டம் (IUDM) **2011–12** திட்டத்தின்கீழ் குளச்சல் நகராட்சியில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்காணும் பணிகள் செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| **I** | **சாலைகள்** | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் சாலையில் பேவர் பிளாக் மற்றும் தார்தளம் அமைத்தல் | **21.60** |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பந்தவிளையில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | **19.50** |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலையில் தார்தளம் அமைத்தல் | **16.65** |
| 4 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை முதல் பாலத்தன்கரை வரை தார்தளம் அமைத்தல். | **7.20** |
| 5 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட விவேகானந்தர் சாலை மற்றும் சன்னதித்தெரு முதல் வெள்ளிப்பிள்ளையார் கோவில் சாலை வரை தார்தளம் அமைத்தல். | **9.50** |
| 6 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் காலனியில் தார்தளம் அமைத்தல். | **7.00** |
| 7 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி முதல் கொட்டில்பாடு சாலையில் தார்தளம் அமைத்தல். | **3.90** |
| 8 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் முதல் சிஙகன்காவு சாலையில் தார்தளம் அமைத்தல். | **11.65** |
| 9 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாரிமார் இசக்கியம்மன் வடக்கு தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல். | **3.00** |
| 10 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுக சாலையில் தார் சாலை அமைத்தல். | **59.00** |
| 11 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனியில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | **15.00** |
| 12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட முகைதீன்பள்ளி சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | **12.00** |
| 13 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட களிமார் முதல் முண்டம் பிலாவடி சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | **10.00** |
| 14 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அந்தோணியார் காலனியில் சிமெண்ட் தளம் அமைத்தல். | **12.00** |
| 15 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கடற்கரை சாலையில் சிமெண்ட் தளம் அமைத்தல். | **23.00** |
| | **மொத்தம்** | **231.00** |

| | | |
|---|---|---|
| **II** | **வடிகால் ஓடை** | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஜேம்ஸ் மருத்துவமனை முதல் திக்கணங்கோடு சாலை வரை நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 37.75 |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை முதல் பெரியபள்ளி வரை இருபக்கமும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 33.00 |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் சந்திப்பு முதல் ஒற்றைக்கண்பாலம் வரை வடிகால் ஓடையின் மேல் மூடு சிலாப் அமைத்தல். | 7.25 |
| | **மொத்தம்** | **78.00** |

| | | |
|---|---|---|
| **III** | **மின்விளக்குகள் அமைத்தல்** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட முக்கியமான பகுதிகளில் 36W, 85W மின்சேமிப்பு விளக்குகள் ( CFL Lamp ) மற்றும் அதற்குரிய உபகரணங்கள் அமைத்தல். | 12.00 |
| | **மொத்தம்** | **12.00** |
| **IV** | **திடக்கழிவு மேலாண்மை திட்டம்** | |
| 1 | கண்காணிப்பு வாகனம் – 1 எண்ணம்<br>குப்பைகள் அள்ளும் வாகனம் – 2 எண்ணங்கள் | 18.00 |
| 2 | மண்புழு உரம் தயாரிக்கும் கூடம் அமைத்தல். | 10.00 |
| 3 | குப்பைகள் மட்க வைத்து உரமாக்கும் கூடம் அமைத்தல். | 10.00 |
| 4 | பாதுகாப்பு அறை, அலுவலக அறை, இருப்பு அறை ( Store Room) மற்றும் உர மூட்டை தைக்கும் அறை மற்றும் கழிவறை கட்டுதல். | 12.00 |
| | **மொத்தம்** | **50.00** |

<u>அ.குறிப்பு</u> : அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று திட்ட பிரேரணை சமர்ப்பித்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.93. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தின் அருகில், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011–2012 நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ. 5.00 லட்சம் மதிப்பீட்டில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 29.12.2011–ம் தேதி தினமலர் நாளிதழில் பிரசுரம் செய்த வகையில் ரூ. 1800/–ஐ செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/7435/2011)

**தீர்மானம் எண்.94. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 14**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் இரண்டு மழைநீர் சேகரிப்பு தடுப்பு சுவர் மற்றும் 6 எண்ணஙகள் ஆழ்குழாய் கிணறுகளும் அமைந்துள்ளன. மேற்படி இடம் நீர் ஊற்று அதிகமாக உள்ளதாலும், மழையினால் மேட்டு நிலத்திலிருந்து அடித்து வரப்பட்ட மண் நிரம்பி உள்ளது. எனவே மேற்படி இடத்தில் மழைநீர் தேஙகுவதற்கு ஏதுவாக மண்ணை அப்புறப்படுத்தவும், பாலத்தன்கரை ஓடையை துார் வாரி செப்பனிடவும், உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 36,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/343/2012)

**தீர்மானம் எண்.95. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 15**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தில், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2011–12–ன்கீழ் ரூ. 5.00 லட்சம் மதிப்பீட்டில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு 12.01.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | M/s.JSB Power Lights, Tirunelveli. | Tender Schedule –உடன் இணைக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப குறிப்புகள் நிரப்பப்படாததால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. |
| 2. | M/s. Bala Enterprises Chennai. | - do - |
| 3 | M/s.Malani Lighting Company, Tirunelveli. | - do - |
| 4 | M/s.T.R. Traders, Thazakudy. | தொழில் நுட்ப குறிப்புக்கள் நிரப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டை விட 4.04% குறைவு. (ரூ. 4,79,800/– |

மேற்படி பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 முதல் 3 வரையிலான நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப குறிப்புகள் நிரப்பப்படாததால் நிராகரிக்கப்பட்டது. வரிசை எண்.4–ல் M/s.T.R. Traders, Thazakudy நிறுவனம் தொழில் நுட்ப குறிப்புகளை நிரப்பியுள்ளதாலும் மதிப்பீட்டைவிட 4.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதாலும், மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிப்பது தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டப்பணியாதலால், பணியின் அவசர அவசியம் கருதியும், மதிப்பீட்டைவிட 4.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.T.R. Traders, Thazakudy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.7764/2011/இ1

**தீர்மானம் எண்.96. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 16**

இந்நகராட்சி சொந்தமான ஈப்பு T.N.74 V 3530 –ன் ரேடியேட்டரில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் சரியாக இயங்காமல் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே அதனை கழற்றி சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 3950/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : அவசர அவசியம் கருதி, பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ2/5030/2007)

**தீர்மானம் எண்.97. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 17**

இந்நகராட்சிக்குட்பட்ட 10–வது வார்டில் துறைமுகம் அருகில் குழாய் மூலம் கழிவுநீர் கொண்டு செல்லப்பட்டு பாதியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் கழிவுநீர் கடற்கரை அருகில் குடியிருப்புகளில் தேங்கி சுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே தேங்கி நிற்கும் கழிவுநீரை 8'' குழாய் மூலம் கடற்கரை அருகில் சேர்ப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.40,000/–க்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/6991/2011)

**தீர்மானம் எண்.98. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 18**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குளச்சகடைத் தெருவில் தெருமுனை இறுதி வரை பகிர்மானக் குழாய் இல்லாத காரத்தினால் புதிதாக 2”பிவிசி குழாய் தெருமுனை வரை அமைக்கவும், செக்காலத்தெருவில் 3” Sluice Valve அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 28,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ2/344/2012)

**தீர்மானம் எண்.99. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 19**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்வதற்கு பேருந்து நிலையத்தினுள் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அருகில் உள்ள Pumproom ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் தெற்கு பகுதியில் உள்ள வாயில் கதவு இடையூறாக இருப்பதால் வாயில் கதவை கிழக்கு பகுதிக்கு மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு தொகை ரூ. 2,400/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/345/2011)

**தீர்மானம் எண்.100. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படாமல் ஏகமனதாக தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 20**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண். 1 மற்றும் 2—க்கு இடையேயுள்ள சுவரை நீக்கி ஒரே கடையாக மாற்றுவதற்காக அனுமதியும், மதிப்பீட்டு கட்டணம் ரூ.8575/— நகராட்சிக்கு செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். அ1/8072/2011)

**தீர்மானம் எண்.101. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படாமல் ஏகமனதாக தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 21**

**21—வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.நூர்முகம்மது அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பொதுநூலகத் துறைக்குட்பட்ட கிளை நூலகம் பொதுமக்களுக்கு தற்போது பயன்தரும் வகையில் இல்லை. அஙகுள்ள புத்தகஙகள் எல்லாம் போதிய இடவசதி இல்லாமல் ஒதுக்கி வைக்கப்பட்டது போல் அமையப் பெற்றுள்ளது. எனவே அனைத்து மக்களும், வருஙகால இளைய சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் புதிய நூலகம் நகராட்சியின் முக்கியப் பகுதியில் அமைக்க தீர்மானிக்கலாம்.

அ.குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ1/215/2012)

**தீர்மானம் எண்.102. அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகர்மன்றம்